

செம்பட்டியில் நடைபெற்ற ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ஆத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டத்தில் தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசுகிறார். அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், தேர்தல் பார்வையாளர் கள்ளிப்பட்டி மணி, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா சொக்கலிங்கம் புதூரில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு ரூபாய் 61லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோகன சுந்தரம், மாவட்ட கவுன்சிலர் திருமதி ராதா பாலசுப்பிரமணியன், ஒன்றியக் குழுதலைவர் திருமதி சரண்யா ,பள்ளத்தூர் கே.எஸ். ரவி ,குன்னக்குடி சுப்பிரமணியன், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# குறிஞ்சிப்பாடி தொகுதியில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடக்கி வைத்தார்!

கடலூர், ஆக.12-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் முன்னிலையில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்.

முன்னதாக குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், அரங்கமங்கலம் ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் இரண்டாம் கட்ட விண்ணப்பப் பதிவு முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டு விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்வதை ஆய்வு செய்தார்.

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், அரங்கமங்கலம் ஊராட்சியில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15.83 இலட்சம் மதிப்பீட்டிலும், நைனார் குப்பம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.10 இலட்சம் மதிப்பீட்டிலும்; மற்றும் கொளக்குடி ஊராட்சியில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டிலும் என புதியதாக கட்டப்பட்டவுள்ள மூன்று நியாய விலைக் கடைகளையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கருங்குழி ஊராட்சிக்கு தொகுதி திட்டத்தின் கீழ் ரூ.23.56 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தையும், கருங்குழி ஊராட்சி மேட்டுக்குப்பம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ.31.74 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் வடலூர் நகராட்சி, புதுநகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு ரூ.31.42 இலட்சம் மதிப்பீட்டிலும் என குழந்தை நேய பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்களையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

ஆதனை தொடர்ந்து வடலூர் நகராட்சி இராம மூர்த்தி ரெட்டியார் நகர் பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கப்பட்டுள்ளதை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ராஜசேகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் வி.மதுபாலன் கூட்டுறவு இணை பதிவாளர் நந்தகுமார், மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.நாராயணசாமி, வடலூர் நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், நகரச் செயலாளர் தன.தமிழ்செல்வன், குறிஞ்சிப்பாடி பேரூர் கழக செயலாளர் கே.வி.பி.சங்கர், அவைத் தலைவர் ஆர். ராமர், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், பேரூர் துணை செயலாளர் விடுதலை சேகர், கைத்தறி கூட்டுறவு சங்க தலைவர் கைத்தறி சேகர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில்

# 55 நான்கு வழிச்சாலைகளை விரைவில் முடிக்க திட்டம்:

## நெடுஞ்சாலைத்துறை அதிகாரி தகவல்!

சென்னை, ஆக. 12 -

முதல்வர் சாலை மேம்பாட்டு திட்டத்தில் 2021-22 மற்றும் 2022-23ல் எடுக்கப்பட்ட 64 நான்கு வழிசாலை பணிகளில், 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 55 பணிகள் விரைந்து முடிக்கப்பட உள்ளன என நெடுஞ்சாலைத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

1954ம் ஆண்டு நெடுஞ்சாலை துறை ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி இந்தியாவிலேயே மாநில அளவிலான முதல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. இது தான் இந்தியாவிற்கே முன் மாதிரியான ஆராய்ச்சி நிலையம் என்ற தனி பெருமையும் உண்டு.

இதனிடையே முதல்வர் சாலை மேம்பாட்டு திட்டம் எனும் புதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு கடந்தாண்டு உருவாக்கி அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த திட்டத்தில் மாவட்ட தலைமையிடங்கள் மற்றும் தாலுகா தலைமையிடங்களை இணைக்கக்கூடிய 2,200 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில் அடுத்த 10 ஆண்டுகளில் 4 வழிச்சாலைகளாகவும், 6,700 கி.மீ நீளமுள்ள சாலைகள் இரண்டு வழித்தட சாலைகளாகவும் மேம்படுத்தப்பட உள்ளன.

இதில் முதல் கட்டமாக இரண்டு ஆண்டுகளில் 10 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகள் ரூ.4000 கோடியில் சீரமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. கடந்தாண்டு 10 ஆயிரம் கிலோ மீட்டர் கிராமப்புற சாலைகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிய சாலைகள் அமைத்தல், பழைய சாலைகளை புதுப்பித்தல், வலுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை துறை சாலையில் உள்ள 1,781 தரைப்பாலங்கள் உயர் மட்ட பாலங்களாக ரூ.2,401 கோடியில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 648 தரைப்பாலங்களை உயர் மட்ட பாலங்களாக ரூ.610 கோடியில் கட்ட எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2ம் கட்டமாக 435 தரைபாலங்கள் உயர்மட்ட பாலங்களாக ரூ.1,105 கோடியில் கட்டப்பட உள்ளன. 2026ம் ஆண்டிற்குள் தரைப்பாலங்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவாக உள்ளதாக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார். அதன்படி முதல்வர் சாலை மேம்பாட்டு திட்டத்தில் 2021-22 மற்றும் 202--23ல் எடுக்கப்பட்ட 64 நான்கு வழிசாலை பணிகளில், 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 55 பணிகளை விரைந்து முடிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரி கூறியதாவது: இத்திட்டத்தின் கீழ் நான்கு வழிச்சாலை பணிகளில் 2021-22ம் ஆண்டில் 32 சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 9 சாலைகள், சென்னை மாவட்டத்தில் 7 சாலைகள் என மொத்தம் 32 சாலைகள் கடந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த பணிகளுக்கு என மொத்தம் ரூ.2,112.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 9 சாலைகள் முழுமையாக 4 வழிச்சாலையாக மாற்றப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2022-23ம் ஆண்டில் அதிகபட்சமாக மதுரை மாவட்டத்தில் 9 சாலைகள், விழுப்புரம், சேலம், திருப்பூர் மாவட்டத்தில் தலா 6 சாலைகள் என மொத்தம் 32 சாலைகள் 4 வழிச்சாலைகளாக மாற்றும் பணிகளுக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதற்காக ரூ.1428.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு சில பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் 80 சதவீதம் வரை முடிவடைந்துள்ளது. மீதமுள்ள 55 பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனிடையே கடந்தாண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளில் மதுரையில் 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. சென்னை, திருப்பூரில் தலா 2 பணிகள், திருவண்ணாமலை, சேலத்தில் தலா ஒரு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. முடிக்கப்பட்ட பணிகள் அனைத்தும் ஓராண்டில் முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

4 வழிச்சாலையாக முடிக்கப்பட்ட 9 பணிகள்

★ திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பண்ணூரில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11 மாதங்களில் பணிகள் முடிவடைந்துள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டம் புக்கத்துறை - உத்திர மேரூர் இடையே 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.54.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

★ வேலூர் காட்பாடி- திருவலம் இடையே 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.47 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

★ தருமபுரி மாவட்டம் பொய்யப்பட்டியில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.37.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 100 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

★ திருப்பூர் மாவட்டம் புத்தரச்சல் முதல் மேட்டுக்கடை வரை 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.40.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11 மாதங்களில் 100 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

★ திருப்பூர் மாவட்டம் மேட்டுக்கடை பகுதியில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.53.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 10 மாதங்களில் 100% பணிகள் முடிவடைந்துள்ளது.

★ மதுரை மாவட்டம் ஒத்தக்கடையில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.50.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11 மாதங்களில் 100% பணிகள் முடிவடைந்துள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் உட்கோட்டம் பகுதியில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.40.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13 மாதங்களில் பணிகள் 100 சதவீதம் முடிவடைந்துள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு பகுதியில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்த ரூ.38.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 12 மாதங்களில் 100 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது.

**நான்கு வழிச்சாலை பணிகள்**

கோட்டம் 2021-22- 2022-23

எண்ணிக்கை - மதிப்பு - எண்ணிக்கை - மதிப்பு

சென்னை - 7 ரூ.360.78 கோடி - 1 ரூ.111 கோடி-

திருவண்ணாமலை - 4 ரூ.375.29 கோடி - 2 ரூ.208 கோடி-

விழுப்புரம் - 4 ரூ.551.70 கோடி - 6 ரூ.376 கோடி-

திருச்சி-1 ரூ.74.80 கோடி- 2 ரூ.115 கோடி-

சேலம் 9-ரூ.438.44 கோடி - 6 ரூ.264.53 கோடி -

திருப்பூர் - 2 ரூ.93.90 கோடி - 6 ரூ.137.45 கோடி-

மதுரை - 5 ரூ.217.17 கோடி- 8 ரூ.165.57 கோடி -

திருநெல்வேலி - 1 ரூ.51 கோடி -

மொத்தம் 32 - ரூ.2112.08 கோடி - 32 ரூ.1,428 கோடி.

# சிலம்புச் செல்வரின் போராட்டத்தை ஏற்பாரா அம்மணி?

என் இனிய தமிழ் சொந்தங்களே........

நீங்கள் கண்டும் காணாமல் இருப்பதனால் நாடாளுமன்றத்தில் ஏதேதோ நடக்கிறது. ஏதேதோ பேசப்படுகிறது. சாகச சித்தர்கள் மூவர் நாடாளுமன்றத்திலே வார்த்தை நர்த்தனம் செய்பவர்கள் அவர்கள். அதிலும் அந்த அம்மணி சிலம்புச் செல்வர் மா.பொ.சியை துணைக்கு அழைக்கிறார். ஐயா எழுதியதை சிலப்பதிகாரத்தில் இருக்கிறது என்கிறார். ஒப்புக் கொள்வதாகவே வைத்துக் கொள்வோம் . ஆரியரும் தமிழரே என் ம.பொ.சி. எழுதியதாகச் சொல்கிறார். திராவிடம் என ஒன்று இல்லை தமிழகமே இருந்தது என்கிறார்.

அத்தோடு நிறுத்தாமல் ம.பொ.சி.யின் எழுத்துக்களை நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நின்று கொண்டுதமிழில் படித்து காட்டுகிறார். பிற மாநிலத்துக்காரர்கள் வேண்டுமானால் ஏமாந்து விடலாம். திராவிடத் தமிழர்களுக்கு வரலாறு தெரியும். பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் ஆகியோர் வரலாற்றை விளக்கமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

சிலம்புச் செல்வரின் காலத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சர் ஜான் மார்ஷல்என்ற ஆராய்ச்சியாளர் திராவிட பண்புகளை ஆராய்ந்து அறிந்து கூறியதாவது:- பண்டைத் தமிழரின் வாழ்வு பாடுபட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும் ஆரியரின் வரவின் பின்னால்தான் என்று தன் ஆராய்ச்சியின் முடிவில் எழுதியது மட்டுமல்லாமல் ஆரியமே திராவிட நாகரிகத்தை பாழ்படுத்தியது என்றும் சொல்கிறார்.

மறுப்பாரா ஆரிய அம்மணி? ஜான் மார்ஷல் அவர்களுக்கு பின்னால் பல ஆராய்ச்சியாளர்கள் திராவிட நாகரிகம் பாழானதுக்கு ஆரிய வரவே காரணமாயிற்று என சான்றுகளோடு எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். அதையெல்லாம் விட்டு விட்டு அம்மையார் ம.பொ.சி.யை கையில் எடுக்கிறார். ஏழுமலையானின் வாசஸ்தலம் ஆனதிருப்பதி கோவில் முருகன் கோவில். ஆகவே அது தமிழ்நாட்டுக்கே சொந்தம் என்று போராடியவர் சிலம்புச் செல்வர். மற்ற விஷயங்களுக்கு அவரை சாட்சிக்கு எழுதும் ஐயங்கார் அம்மையார் சிலம்புச் செல்வரின் இந்தப் போராட்டத்தையும் ஏற்றுக் கொள்வாரா? திருத்தணியை வென்றெடுத்து வெற்றிவாகை சூடிய சிலம்புச் செல்வர் தனித்தமிழ்நாடு எண்ணம் கொண்டவர் என்பதை அம்மையார் ஏற்றுக் கொள்வாரா?

நாடாளுமன்றத்தில் இன்னுமொரு விஷயத்தை அம்மையார் சொல்லுகிறார். ஜெயலலிதா அவர்களை சட்டசபையிலே அன்றைய ஆட்சியாளர்கள் அவமானப் படுத்தினார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால் தன் தோழிக்கு ஏற்பட்ட அவமானத்தைச் சொல்லுகின்ற அமைச்சர், ஜெயலலிதா அவர்களின் மருத்துவமனை மரணத்திற்கு காரணம் யார் என்பதையும் தெரிந்து வைத்திருப்பார்களே? அதையும் நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்லி இருக்கலாமே?

மூன்று சதவீதத்தினருக்கு ஒன்றிய அரசில் மூன்று முக்கிய அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தர்மம் நியாயங்களைப் பற்றி பேசுகின்ற அம்மையார் முதலில் இது நியாயமா? ஜனநாயகமா என்பதை சொல்லுவாரா? அப்படி என்றால் மீதி 97 சதவீதத்தை இவர்கள் ஆள்வது மக்களாட்சியாகுமா? இதுதான் அவர்களின் சமநீதியா?

கேட்பதற்கு இன்னும் ஏராளம் இருக்கின்றது. ஆனால் நமது தமிழர்கள் இன்னும் கொஞ்சம் விழிப்புணர்வு அடைய வேண்டும்.



**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட, நகரக் கழகம் சார்பில் அமைதிப் பேரணி!

## கலைஞர் சிலைக்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி -சிவ.வீ.மெய்யநாதன் மாலை அணிவித்து மரியாதை!

புதுக்கோட்டை, ஆக.12-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாள் அமைதி ஊர்வலம் . அண்ணா சிலையில் இருந்து ஊர்வலமாக சென்று மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.,ரகுபதி , சுற்றுச் சூழல் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர். கவிதைப்பித்தன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை,முத்துராஜா. நகரச் செயலாளர் ஆ.செந்தில், அரு.வீரமணி, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், சுபசரவணன், செ.அசோக் பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பி. ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், எம்.லியாகத் அலி. கீரை.தமிழ்ராஜா, என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, கே.எஸ். சந்திரன், தவ. பாஞ்சாலன். மு.பி.ம.சத்தியசீலன், வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், அரு.வடிவேல், எம்.எம். பாலு, மாலா ராஜேந்திரதுரை, அ.ரெத்தினம், ராஜேந்திரச்சோழன், அஸ்ரப் அலி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், வி.ஜி.ஆர். மணிவண்ணன், டி.எம்.ஆர். ராமமூர்த்தி, பூங்குடி எம். சிவா, வி.என்.எம்.பாலு, வே ராஜேஸ், செந்தாமரை பாலு, கந்தர்வக்கோட்டை ராஜா, எஸ்.வி.ஆர்.ராஜா,

ஜி.டி.ஆர்.இளவரசன், உமுருகேசன், கே.சி.சிவக்குமார், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் ஜம்ஸ், நா.ஸ்டாலின் நாராயணசாமி, விளாப்பட்டி சிவா, வடவாளம் க.செ மணிமாறன், சுமோ பாலு, ஆ.மரிய எட்வின், காதர் கனி, வெற்றிச்செல்வன், கனகம்மன் பாபு, தெய்வானை, பிரசன்னா, பிரபு கேண்டின் பன்னீர், ரெங்கராஜ், மா.மணிவேலன், சேட் (எ) ஷாஜகான், எம். கே. அறிவுடைநம்பி, மு.ராஜதுரை, ராமலிங்கம், அரங்கநாயகம், செ.ரமேஷ், ஜேம்ஸ், பிரேம் ஆனந்த், டி. அப்புக்காளை,

தெய்வானை, சபா, பிரசன்னா, கமலா பாண்டியன், கவிவேந்தன், பால்ராஜ், தமிழ்ச்செல்வன், விஜயகுமார், ஆர்.எம்.சத்யா, ஜாகீர் உசேன், விஜயகுமார், அன்வர் ராஜா, சதன் ஆசிப், ஓவியா, பிரபாகரன், ஞானவேல், மணிகண்டன், மகேந்திரன், ஜானகிராமன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்."


# 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!





## கலைஞர் நூற்றாண்டு விழா:

# அரக்கோணத்தில் தையல் மெஷின் வழங்கல்!

## வி.எல்.ஜோதி - கழகத்தினர் பங்கேற்பு!

அரக்கோணம், ஆக. 12 -

கலைஞர்நூற்றாண்டு நலத்திட்ட உதவிகள் விழா தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கம் இணைந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி ஆணைக்கிணங்க 28வது வார்டு நகர மன்ற உறுப்பினர் ராஜலட்சுமி நம்பி ராஜன் தலைமையில் அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல். ஜோதி தாமரை.களஞ்சியம் குறிஞ்சி. மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பிளாஸ்டிக் பை ஒழிப்பதற்காக துணிப்பை தைக்க உயர்தர தையல் மெஷின் வழங்கினார்.

இதில் அரக்கோணம் நகர மன்ற தலைவர் லட்சுமி பாரி, துரைசீனிவாசன், நகர அவை தலைவர் நந்தாதேவி Mc நகர துணை செயலாளர் சிட்டிபாபு 26வது வார்டு அரக்கோணம் நகர மன்ற உறுப்பினர் சாமுண்டீஸ்வரி அன்பு, 5வது வார்டு நகர மன்ற உறுப்பினர் கங்காதரன், 13வது வார்டு அரக்கோணம் நகர மன்ற உறுப்பினர் டி.அந்தோணி, 32வது வார்டு வட்டப் பிரதிநிதி மற்றும் கழக முன்னோடிகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.